

நடைபெற்று முடிந்த நீட் தேர்வில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை முத்துராஜா புதல்வி செல்வி எம்.பத்மவர்ஷினி 720 மதிப்பெண்களுக்கு 685 மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்று நடந்து முடிந்த மருத்துவர்களுக்கான கலந்தாய்வில் மதுரை அரசு இராஜாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் படிக்க இடம் கிடைத்ததை முன்னிட்டு தமிழ்நாடு முதல்வர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை சென்னை ஆழ்வார்பேட்டை இல்லத்தில் சந்தித்து தனது குடும்பத்தினருடன் வாழ்த்துக்கள் பெற்றார்.



கோலியனூர் கிழக்கு ஒன்றியம் தாதம்பாளையம் கிளையில் ஒன்றியச் செயலாளர் பி.தெய்வசிகாமணி தலைமையில், மாவட்ட மருத்துவர் அணி தலைவர். செந்தில்குமார் ஏற்பாட்டில் மிக எழுச்சியாக நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் கழக பவள விழாவில் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி கலந்துகொண்டு கழகக் கொடியேற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன், ஒன்றியச் செயலாளர்கள் க.மும்மூர்த்தி, தே.முருகவேல், கல்பட்டு வி.இராஜா, ஒன்றிய குழுத் தலைவர் சச்சிதானந்தம், துணைத் தலைவர் உதயகுமார், ஒன்றிய நிர்வாகிகள் அவைத் தலைவர் இரா.கண்ணப்பன், சௌந்தர், குணசேகர், ஜெயபால், ஸ்ரீதர், மாவட்ட கவுன்சிலர்கள் கேசவன், நகர பொருளாளர் இளங்கோ, மாவட்ட இளைஞர் அணி செ.தினகரன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**தஞ்சாவூரில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, பொது சுகாதாரம் மற்றும்**

# நோய்த் தடுப்பு மருந்து துறை சார்பில் 3வது சர்வதேச பொது சுகாதார மாநாடு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் கொடியசைத்து துவக்கி வைத்தார்!



தஞ்சாவூர் அக்.7-

தஞ்சாவூர் மாவட்டம் தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையம் அருகில் ஆம்னி பேருந்து நிலைய வளாகத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து துறை சார்பில் 3வது சர்வதேச பொது சுகாதார மாநாட்டினையொட்டி, பொது சுகாதாரத்துறை சீர்மிகு திட்டங்களின் அணிவகுப்பு பேரணியினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் (03.09.2024) அன்று கொடியசைத்து துவக்கி வைத்து இப்பேரணியில் கலந்து கொண்டார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம்,தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச. முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன், டி.கே.ஜி.நீலமேகம்,மாநகராட்சி மேயர்கள் .சண்ராமநாதன், க. சரவணன் (கும்பகோணம்), மாவட்டஊராட்சித்தலைவர்.ஆர்.உஷா புண்ணியமூர்த்தி, தஞ்சாவூர்மாநகராட்சிதுணைமேயர்கள் மரு.அஞ்சுகம்பூபதி, சுப.தமிழழகன், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் இந்த ஊர்வலத்தில் அமைச்சர் அவர்களுடன் கலந்து கொண்டார்கள்.

பொதுசுகாதாரத் துறையின் சீர்மிகு திட்டங்கள் 36 திட்டங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பதாகைகளை ஏந்தி சுகாதாரத்துறை மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள் 1800 பேர் கலந்து கொண்டார்கள்.

பேரணி தஞ்சாவூர் மகாராஜா மஹாலில் நிறைவடைந்து மாநாட்டு அரங்கில் கூடினார்கள். தஞ்சாவூர் மகாராஜா மஹாலில் நடைபெற்ற 3வது சர்வதேச பொது சுகாதார மாநாட்டில் அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

சென்னையில் கோரிக்கை மனு அளித்த தஞ்சாவூர் மாவட்டம் கபிஸ்தலம் லெட்சுமணன் அவரது மனைவி திருமதி. மாலதி ஆகியோருக்கு தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரிலிப்ட் இயக்குநர்களாக பணிநியமன ஆணைகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் வழங்கினார்கள்.

தமிழகத்தில் பாம்பு மற்றும் நாய்கடிக்கான மருந்துகள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இல்லாமல் இருந்தது. வட்டார, மாவட்ட, மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளிலும் தான் இருந்தது. தற்போது 2,286 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பாம்பு மற்றும் நாய்கடிக்கான தடுப்பூசிகள் உள்ளது. இளம் வயதினருக்கான இதய பாதிப்பு தொடர்ந்துக்கொண்டு இருக்கும் சூழலில், அவர்களுக்கான மருத்துவம் 14 மாத்திரகளை மூலம் தமிழகத்தில் 11 ஆயிரம் உயிர்கள் காக்கப்பட்டுள்ளன. மக்களைத் தேடி மருத்துவம் மூலம் 1.93 லட்சம் பேரும், இன்னுயிர் காப்போம் திட்டத்தில் 2.50 லட்சம் உயிர்கள் விபத்தில் சிக்கியவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர் என உலக வங்கித் தலைவர்கள் மாநாட்டில் எடுத்துரைத்தபோது, தமிழத்தில் செயல்படுத்துகின்ற திட்டங்களை உலக நாடுகள் முழுவதும் செயல்படுத்த வேண்டும் எனக் கூறினார்கள்.

எந்த நோய் பாதிப்பு வந்தாலும் அதை தடுக்கின்ற ஆற்றல் தமிழக சுகாதார துறைக்கு உள்ளது என்பதை மக்களுக்கு உணர்த்தும் வகையிலும், மக்கள் அச்சமின்றி வாழவும் சுகாதாரத் துறை தாங்கி பிடிக்கும் என்ற நம்பிக்கையை மக்களுக்கு விதைப்பதற்கான இது போன்ற மாநாடுகளும், ஆய்வு கட்டுரைகளும் பெரியளவில் உறுதுணையாக இருக்கும்.


ஆரம்ப சுகாதார நிலையத்தில் 24 மணி நேரத்தில் 5 சுகபிரசவம் நடந்துள்ளது. சுகாதாரத்துறைக்கு இதைவிட நல்ல சான்று கிடைத்து இருக்க முடியாது. தாய்மார்களை யோகா போன்ற பயிற்சிகள் அளிக்கப்படும் நிலையில், ஆரம்ப சுகாதார நிலையங்களில் முழுமையாக சுகபிரசவம் என்ற நல்ல நிலையை நோக்கி தமிழகம் சென்றுக் கொண்டு இருக்கிறது.

எந்த நோய் பாதிப்பு வந்தாலும் அதை உடனடியாக தடுக்கிற ஆற்றல் தமிழ்நாடு மருத்துவத் துறைக்கு இருக்கிறது என்பதை மக்களுக்கு உணர்த்துகின்ற வகையிலேயும் மக்கள் அச்சமின்றி வாழவும் மக்கள் எந்த வகையான நோய் பாதிப்புகள் வந்தாலும் தமிழ்நாடு மருத்துவத் துறை நம்மை தாங்கி பிடிக்கும் என்கின்ற நம்பிக்கையை அவர்களுக்கு விதைப்ப தற்கும் இது போன்ற மாநாடுகளில் பேசப்படுகிறது என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில்தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் .க.கண்ணன், மாவட்ட சுகாதாரஅலுவலர் மரு. வீ.சி.ஹேமசந்த்காந்தி அவர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# திருவாரூர் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை!



திருவாரூர்,அக்7.

திருவாரூர் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் 08.10.2024 செவ்வாய்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெறவிருப்பதையொட்டி திருவாரூர் மாவட்ட கழகத்தினருக்கு மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., அழைப்பு விடுத்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர்தம் அறிக்கையில் கூறியுள்ளதாவது,

நாளை 08.10.2024 செவ்வாய்க்கிழமை 10.00 காலை மணியளவில், நமது திருவாரூர் மாவட்ட கழக செயல்வீரர்கள் கூட்டம், கழக அவைத்தலைவர் க.தன்ராஜ் தலைமையில் திருவாரூர் முத்துவேலர் அஞ்சுகம் நினைவரங்கத்தில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் மாவட்ட கழகத்தின் பெயரால் வங்கிக்கணக்கு துவங்குதல், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா, வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் மற்றும் கழக ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசிக்கப் படவுள்ளது.

அதுசமயம் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன்எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றதை முன்னிட்டு திருத்துறைப்பூண்டி நகர திமுக சார்பாக நகர கழக செயலாளர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர். எஸ். பாண்டியன் தலைமையில் காமராஜர் சிலை அருகில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் நகரமன்ற தலைவர் கவிதா பாண்டியன், முன்னாள் ஒன்றிய செயலாளர் முகில் ராஜேந்திரன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் சிக்கந்தர் மாவட்ட பிரதிநிதிகள் சக்திவேல், ஜாகிர் உசேன் , பன்னீர் செல்வம், நகர முன்னாள் தலைவர் சுந்தர் மற்றும் நகர அவை தலைவர் சிதம்பரம், நகர துணை செயலாளர்கள் ஓம் சக்தி கண்ணன், செல்லப்பா, ரவி மற்றும் மாவட்ட நகர வார்டு கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், நகரமன்ற உறுப்பினர்கள் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நீலநாராயணன்

**அக்டோபர் 7 (1996)**



எல்லோராலும் ‘நீலம்’ என்று அன்புடன் அழைக்கப்பட்டவர்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரிடம் அளவற்ற பற்றும் பாசமும் கொண்டவர்.

கழக அமைப்புச் செயலாளராகவும் சென்னை மாவட்டக் கழகச் செயலாளராக இரு முறையும் பணியாற்றியவர்.

தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தவர்.

தலைமைக் கழகச் சார்பில் ‘பெரியார் விருது’ பெற்றவர்.

கழகம் அறிவித்த பல போராட்டங்களில் சிறை சென்றதோடு மிசா கைதியாக ஓராண்டு சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

